*Registered as a News Paper*　　பக்கங்கள் 04　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

**THE EELANAATHAM**　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம்:- 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　சித்திரை 25　　( 07 - 05 - 1992 )　　வியாழக்கிழமை　　ஓசை: 79

பல்கலைக் கழகங்களுக்கு

## திறமை அடிப்படையில் 70 வீத மாணவர் அனுமதி

தற்போது நடைமுறையிலுள்ள நாற்பது சத வீத திறமை அடிப்படையிலான பல்கலைக் கழகத் தெரிவு முறையை எழுபது சத விகிதமாக உயர்த்துவதற்கு பல்கலைக் கழகங்கள் மானிய குழு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இதுகுறித்து ஆணைக்குழு தற்போது அமைச்சரவை அனுமதிக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளை தடைசெய்யும் விவகாரம்

# ஜெயலலிதாவின் அழுத்தத்திற்கு இந்திய மத்திய அரசு பணியுமா ?

## 21-ந் திகதிக்கு முன் முடிவு என்கிறார் அமைச்சர் சவான்

(டில்லி)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது குறித்த முடிவைப் பெரும்பாலும் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் இந்திய மத்திய அரசாங்கம் எடுக்கலாம் எனத் தெரியவருகிறது. தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவினதும் திருச்சி காங்கிரஸ் கட்சி மாநாட்டின் தீர்மானத்தைத் தொடர்ந்தும் மத்திய அரசாங்கல் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விவகாரத்தை வெகு தீவிரமாக ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இந்திய ராஜ்ய சபாவில் கேள்வி நேரத்தின்பின் பேசிய உள்துறை அமைச்சர் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசு தகவல்கள் சேகரித்து வருகின்றது என்றும் அதைத் தடை செய்வதா? இல்லையா? என்பதைப் பற்றி இம்மாதம் 21ஆம் திகதிக்குள் முடிவு எடுக்கப் பெரும்பாலும் மத்திய அரசு முயற்சிகள் செய்யும் என்றார்

### மே-21 முன் புலிகளை தடைசெய்ய

புலிகளைத் தடை செய்வது குறித்து சுப்பிரமணியம் சுவாமியின் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அமைச்சர், விடுதலை புலிகளைத் தடை செய்ய அரசிடம் போதிய ஆதாரங்கள் இல்லை எனத் தான் குறிப்பிட்டதாக வெளிவந்த செய்

ரங்களைத் திரட்டி வருவதாகவே தான் கூறியதாகத் தெரிவித்தார். மேலும் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி திரட்டப்படும் ஆதாரங்கள் விசாரணை மன்றத்திற்கு அனுப்பப் படுவதாகவும் தெரிவித்தார்,

## ராஜீவ் நினைவுதின ஏற்பாட்டு குழுகோரிக்கை

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் முதலாவது நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக மேற்கொள்

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமென்று காங்கிரஸ் வட்டாரங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்

## ஏறாவூரில் நிவாரணத்தில் பாகுபாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்றுபகுதியில் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் சிறிலங்கா அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்ட அடிப்படையில் ஏறாவூர் பகுதியின் ஐயன்கேணி, செங்கலடி குமாரவேலியர், தளவாய், ஆறுமுகத்தான் குடியிருப்பு, நாலாம் குறிச்சி, ஐந்தாம் குறிச்சி, கொம்மாந்துறை ஆகிய கிராமங்களிலிருந்து இராணுவ மற்றும் முஸ்லிம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கு அனுமதி மறுப்பு

(வவுனியா)

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி வாரக்கணக்காகி விட்டது. ஆயினும் நாம் எமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல அதிகாரிகள் அனுமதி வழங்குகிறார்களில்லை. இப்படி நூற்றுக்கணக்கான அகதிகள் புனர் வாழ்வு, புனர்நிர்மாணத் துறை அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வாவிடம் முறையிட்டார்கள்.

வவுனியாவில் நடைபெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையில் கலந்து கொள்ள வவுனியா வந்திருந்த கிறிஸ்டி சில்வா தாண்டிக்குளம் அகதிகள் முகாமுக்கு விஜயம் செய்து அகதிகளின் நிலைமை

## கடற் புலிகள் அமைப்பு தவழும் குழந்தையாகவுள்ளது

### கடற் புலிகள் விசேட தளபதி சூசை

(யாழ்ப்பாணம்)

காலத்தின் தேவையையும், போராட்டத்தின் தேவையையும் கருதி விடுதலைப் புலிகள் கடற் புலிகள் என்ற பிரிவை ஆரம்பித்தனர். கடற் புலிகள் என்ற அமைப்பு இன்று தவழும் குழந்தையின் பருவத்தில் இருக்கின்றது. இதனை வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு மக்களுடையது என்று கடற் புலிகள் விசேட தளபதி சூசை தெரிவித்தார்.

கடற்கரும் புலிகள் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டமும், கடல் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கானபரிசளிப்பு வைபவமும் நேற்று முன்தினம் வடமராட்சியில் இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய கடற் புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் கூறுகையில் கடல்

இவ் வைபவத்தில் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் இளம் பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர். கடற் புலிகளின் மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்னார் மாவட்ட விசேட தளபதி சுபன், திருமலை மாவட்ட விசேட தளபதி குணம் ஆகியோரும் மலிகை விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். இரு நாட்களாக நடைபெற்ற கடல் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

## 5 நாள் தமிழிசை விழா நேற்று இனிதே நிறைவு

(நமது நிருபர்)

முத்தமிழ் விழாவின் முன்னோடி விழாவாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் தமிழீழக் கலைஞர்களை ஒன்றிணைத்து நடாத்திய தமிழிசை விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். நல்லூர் மணிகளை இசையவைத்தது. கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமான இத் தமிழிசை விழா ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்று நேற்றுடன் முடிவடைந்தன.

நல்லூர் ஆலயத்தின் அணைத்து வீதிகளும் மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நேற்றுவரை நடை

ஷ்டிக்கும் முகமாக மேற்கொள் ளப்படவிருக்கும் பல்வேறு திட்டங்களில் ஒரு பகுதியாக

டிருக்கின்றன என்று தெரிவிக் கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிட்டதாக வெளிவந்த செய் தியை மறுத்த அதேவேளை அரசாங்கம் மேலதிக ஆதா

கள் முகாமுக்கு விஜயம் செய்து அகதிகளின் நிலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

யல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் கூறுகையில் கடல் ஆதிக்கம் அதிகரித்தால் மட் டுமே விடுதலைப் போராட் டத்தை வென்று முடிக்கலாம் எனத் தெரிவித்தார்.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். நல்லூர் வடக்கு வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் தமிழீழக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் மக்கள்

களினால் அலங்கரிக்கப்பட்டி ருந்தது. நேற்றுவரை நடை பெற்ற ஐந்து நாள் தமிழிசை விழா நிகழ்ச்சிகளின் இறுதியில் விடுதலைப்புலிகள் மக்கள்முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் மீது பழி சுமத்துவதால் புலிகளை அழித்துவிட முடியாது

## திராவிடக்கழகத் தலைவர் வீரமணி

(சென்னை)

''தம்பி பிரபாகரன் மீது வீண் பழி சுமத்தினாற்போல தமி ழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தை அழித்துவிடலாம் என இந்திய அரசு எண்ணுகிறது. இது மிகவும் தவறான கண் ணோட்டமாகும். தென் ஆபி ரிக்காவில் திரு. நெல்சன் மண் டேலா மீது வீண் பழி சுமத்தி அவரை 26 ஆண்டுகள் சிறைக் குள் தள்ளினார்கள். ஆனால் தென்னாபிரிக்க விடுதலை இயக்கம் அழிந்து போக வில்லை''

இவ்வாறு திராவிடக் கழகத் தின் தலைவர் திரு. வீரமணி சமீபத்தில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக் கத்திற்கு எதிராக 'இந்து' பத்திரிகை மேற் கொண்டு வரும் விசமப் பிரசாரத்தை வன்மையாகக் கண்டித்த வீர மணி ''பிராமணிய அதிகார வர்க்கத்தின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் இந்தப் பத்தி ரிகை விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரப் பீரங்கி யாக செயற்படுகிறது. இந்த விசமப் பிரசாரமானது திரா விட இயக்கத்தையும் தமிழ்த் தேசிய வாதத்தையும் நசுக்கி விடும் நாசகார நோக்கத்தைக் கொண்டது.'' என்று குறிப் பிட்டார்.

''நீண்ட காலமாகவே விடு தலைப் புலிகள் இயக்கம் தமிழ் நாட்டில் இயங்கிவந்திருக் கிறது. புலிகள் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைப் பதற்கும், புலிகள்இயக்கத்தை வளர்த்து விடுவதற்கும் இந் திரா காந்தி அம்மையார் மட்டுமன்றி ராஜீவ் காந்தியும் அமரர் எம். ஜி. ராமச்சந்திர னும் பெரிதும் உதவினார்கள் என்பது இன்று உலகறிந்த உண்மை. 'இந்து' பத்திரிகை யும் பிரபாகரன் பற்றி புகழ் பாடி வந்தது. ஆனால் இப் பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சியும், அ. தி. மு. காவும் புலிகள் மீது சேற்றை வாரி வீசுகின்றன. ஏதோ இப் பொழுது தான் புலிகள் இயக் கம் தமிழ் நாட்டில் செயல் படுவது போலவும், இந்தச் செயற்பாடுகள் இந்தியாவுக்கு ஆபத்தானதெனவும் இந்துப் பத்திரிகை பூச்சாண்டி காட்டி வருகிறது. முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முயல்வதுபோல இந் தப் பிராமணியப் பத்திரிகை பழைய வரலாற்றை மூடி மறைக்கப் பார்க்கிறது'' என்று திராவிடக் கழகத் தலைவர் குற்றம்சாட்டினார்.

# நேரடிப் பேச்சின் மூலம் பிரச்சினையை தீர்க்கலாம்

(சென்னை)

போராளிகளும் அரசும் நேரு க்கு நேராகப் பேசுவதன் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினையையும், அந்த நாட்டின் ஏனைய பிரச்சினை களையும் சுமூகமாகத் தீர்த்து வைக்கலாம் என்று இந்திய அரசின் சிறுபான்மையினர் ஆணைக் குழுவின் உறுப்பி னர் தம்மவீரயோ தெரிவித் தார்.

கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச பௌத்த மாநா டொன்றில் கலந்து கொண்டு புதுடில்லி திரும்பிய தம்ம வீரயோ சென்னையில் செய் தியாளரிடம் மேற்கண்ட வாறு கூறினார்.

இரு தரப்பினரும் தொட ர்ச்சியாகப் பேசுவதன் மூலம் பிரச்சினைக்குதீர்வு ஒன்றை காணலாம். அரசியல்வாதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளை அனுப்பிவிட தீவிரமாக முயல வேண்டும்

## - ராமதாஸ்

(சென்னை)

இலங்கைத் தமிழ்அகதிகளை நாடு திருப்புமாறு தூண்டுவ தில் சகலவித முயற்சிகளும் மேற் கொள்ளப்பட வேண்டு மென அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு பொறுப்பான தமிழ்நாடு வருவாய்த்துறை ஆணையாளர் சி. என். ராம தாஸ் கூறியுள்ளார்.

விமான மூலமென்றாலும் அகதிகளை இலங்கைக்கு அனுப்பிவிடவே நாம் திட்ட மிடுகின்றோம். ஒருஇலட்சத்து பதின்மூவாயிரம் அகதிகளில் இதுவரை பதினாறாயிரம் பேர் திருப்பியனுப்பப்பட்டுள் ளார்கள். இவர்களில் சுமார் ஆயிரம் பேராவது தூண்டுத லின் விளைவாக நாடு திரும்பி யவர்களாக இருப்பார்கள் என் றும்தெரிவித்தார்.

# ரெலோ அணு சுட்டுக் கொலை

கடந்த நாலாம் திகதி மாலை ஐந்து மணியளவில் மட்டக்களப்புகளுவாஞ்சிக்குடி பட்டிருப்புச் சந்தியில் வைத்து ரெலோகுழுவைச்சேர்ந்த அணு என்பவர்விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# பட்டதாரி பயி. ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

பட்டதாரி பயிற்சி ஆசிரி யர்கள் விரைவில் நிரந்தர மாக்கப்படுவர் என கொழும் புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது சம்பந்தமான பரீட்சை ஓகஸ்ட் மாதம் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்ப டும் என்றும் கூறப்பட்டுள் ளது.

# பெரிய புல்லுமலையில் நான்கு தமிழர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத் திலுள்ள பெரிய புல்லுமலை யில் நான்கு தமிழர்கள் இரா ணுவத்தினரால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர். பெரிய புல்லுமலையில் இருந்து இரு பது மைல்களுக்கு அப்பால் உள்ள கூட்டுறவுக்கடையொன் றிற்கு உணவுப் பொருள்களை வழங்கிவந்த இவர்களைச் சுட் டுக்கொன்ற இராணுவத்தினர் இவர்களிடமிருந்த உணவுப் பொதிகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர். நான்கு சட லங்களும் பற்றைக்காடுகளி னுள் இருந்து கண்டெடுக்கப் பட்டன. கடந்த சனியன்று இச்சம்பவம் இடம்பெற்றது

## மட்டக்களப்புகிராமங்கள்பலசுற்றிவளைப்பு

# மாணவர் உட்பட பலர் கைது; பாடசாலைகள் செயலிழப்பு

பழுகாமம் நாரவற்குடா பகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு பாடசாலை மாண வர்கள் உட்பட ஏழு பேரைக் கைது செய்ததைத் தொடர் ந்து அப்பகுதி பாடசாலைகள் அனைத்தும் செயலிழந்துள் ளன.

நேற்று முன்தினம் காலை ஆறுமணியளவில் களுவாஞ்சி க்குடி, பெரிய போரதீவு ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிரு ந்த சிறிலங்கா இராணுவத் தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து பழுகாமம் நாவற் குடா பகுதிகளைச்சுற்றிவளை த்து பலத்த தேடுதல் வேட் டையை நடாத்தினர். இதன் போது அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொது மக்கள் இவர்களால் அழைத் துச் செல்லப்பட்டு பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத் தில் பலமணி நேரமாகத் தடு த்துவைக்கப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல் லப்பட்டவர்களில் உயர்தர வகுப்பு மாணவர்களான வீரக் குட்டி கதிரமலை (வயது 20, பழுகாமம்) தங்கராசா ரஞ்சித ராசா (வயது 19, பழுகாமம்) ஆகியோரும் இராசதுரை புவ னசிங்கம் (வயது 20, பழுகாமம்) கிருஷ்ணபிள்ளை குனேந்திரன் (வயது 20, வள்ளுவன்மேடு பழுகாமம்) வேல்முருகு நாக ராஜா (வயது 20, பழுகாமம்) சுப்பிரமணியம் சிவநேசக்கன் (வயது 23, பழுகாமம்) நாக மணி பரமானந்தம் (வயது 26 வீரஞ்சேனை) ஆகிய பொது மக்களும் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நில விய பதற்ற நிலையினால் பழுகாமம், தும்பங்கேணி திக் கோடை, காந்திபுரம், 38 ஆம் கிராமம், 39 ஆம் கிராமம், 40 ஆம் கிராமம், அம்பிலாந் துறை, கற்சேனை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலை கள் அனைத்தும் இயங்க வில்லை இதனால் இங்கு கல்விகற்கும் நாலாயிரத்திற் கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பெற்றுக் கொள்ளவும்

(மண்டைதீவு)

ஆனைப்பந்தியில் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அதுஇடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள புகையிரத நிலைய மூகாம் சுகாதாரப் பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் ஆதாரம் காட்டிபெற்றுக் கொள்ள முடியும் என புகையிரத நிலைய சுகாதாரப்பகுதியினர் தெரிவித்தனர். (88)

## நிவாரணத்தில் பாகுபாடு

(கொழும்பு)

வெலிக்கந்த அமிஞ்சிப் பொத்தாகராப்பொல, முத்துகல் ஆகிய கிராமங்களில் படுகொலைகளால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் பாகுபாடு காட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## உடனடியாக தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சீமெந்து கட்டட தொழிலாளர் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு சில உதவிகளைப் பெற்றுக் கொடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

இவ் உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு சில பதிவு வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் சீமெந்து தொழிலாளர்கள், வர்ண பூச்சு செய்யும் தொழிலாளர்கள் அனைவரையும் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுள்ளது.

அத்துடன் சகல பிரதேச தொடர்பாளர்களையும் உடனடியாக தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் படியும் சங்க செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது'

## வவுனியாவில் கம் உதாவ?

(கொழும்பு)

அடுத்த கம் உதாவ கொண்டாட்டங்கள் வவுனியாப் பகுதியில் நடைபெறலாம் எனத் தெரியவருகின்றது.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கம் உதாவ கொண்டாட்டங்களின் தொடராக அடுத்ததான பதினான்காவது கம் உதாவ கொண்டாட்டங்களை வவுனியாவில் மேற்கொள்ளசிரேட்ட அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகின்றது. வடக்கு மாகாணத்தில்

## துணை புரிந்தவர்களுக்கு கல்விப்பணிப்பாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நிறைவடைந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவை வெற்றிகரமாக நடாத்துவதற்கு உதவி புரிந்து ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத்தரப்பினருக்கும் யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளர் தனது நன்றி அறிதலை தெரிவித்திருக்கின்றார்.

கல்வித்திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியில் கரிசனை காட்டும்நலன் விரும்பிகள் ஆகியோர் பரீட்சை விதிகளுக்கு அமைய மேற்படி பரீட்சைகளை நடாத்துவதற்கு பேருதவி புரிந்துள்ளனர் இவர்களுக்கு யாழ்' கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தனது நன்றி அறிதலை தெரிவித்திருக்கின்றார். (பா)

## வானவியல் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

வானவியல் பற்றிய கருத்துரையும் காட்சியும் நாளை மறுதினம் (சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நாயன்மார்கட்டு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆண்டு 8 மாணவர்களும் இத்துறையில் ஆர்வமுள்ளோரும் இதில் பங்கேற்கும் படி வேண்டப்படுகின்றனர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | மண்ணின் விடிவிற்காய் |
|---|---|
| 16 | 19 |
| — | — |
| 10 | 04 |
| — | — |
| 1972 | 1991 |

### 2-ம் லெப்டினன் - தென்னவன்

(வை. விக்கினேஸ்வரலிங்கம்)

திதி: 7.5.92

(மன்னார் பரப்புக்கடந்தான் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை இவர்]

தமிழீழத் தாயகத்தின்
தவக் கொழுந்தே
உன் மரணம்
இந்த மண்ணில்
விழுதுகளாய் இறங்கி வர
விடுதலை விருட்சம்
வேகமாய் வளர்கிறது
உன் பாதையில்

உன் உறுதியில்
எங்கள் பயணம்
தொடர்ந்தே செல்லும்
வேங்கைகள் உறுதி
சோர்வதும் இல்லை
சுதந்திரப் போரில்
தோல்வியும் இல்லை!

(இவருடன் வீரச்சாவெய்திய சகபோராளிகளுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகிறோம்)

(2540) மாடந்தை மக்கள்

## முஸ்லிம் தகவல் நிலையம் கொழும்பில் அங்குரார்ப்பணம்

முதலாவது முஸ்லிம் தகவல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதுவித அரசியல் சார்போ கலப்போ இன்றி'மிக்' தகவல் நிலையம் ஆரம்பத்தில்வடக்கு கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம்களைப் பாதிக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் அன்றாட நிலைமைகளையும் தென் இலங்கையிலுள்ள முஸ்லிம் அகதிகளதும் வடக்குக் கிழக்கு யுத்தப் பிராந்தியங்களில் வாழும் பாதிப்புற்ற முஸ்லிம்களினதும் அவல நிலையைப் பற்றிய தகவல்களையும் விபரங்களையும் சேகரித்து தேசிய சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்வதில் கவனத்தைச் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தகவல் நிலையத்தின் தலைவராக சர்வதேச இஸ்லாமிய நிறுவனம் அகதிகள் நிவாரண அமைப்பு ஆகியவற்றின் தலைவர் இயங்குவர்.

### ஜே.ஓ.சி. குண்டுவெடிப்புசந்தேகநபர்

## தடுப்புக்காவல் உத்தரவை விலக்குமாறு நீதிபதி ஆணை

(கொழும்பு)

ஜே. ஓ சி. குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து கைது செய்யப்பட்டு பத்து வருட காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறையும், முப்பதினாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட சங்கரப்பிள்ளை பாலச்சந்திரனுக்கு எதிரான தடுப்புக் காவல் உத்தரவை விலக்கி அவரை விரைவில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். என். டி. ஜெய சூரிய உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் இவர் மீதான தடுப்புக்காவல் உத்தரவு இன்னமும் விடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் நீதிமன்றின் உத்தரவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி தடுப்புக்காவல் உத்தரவை - விலக்குமாறும் அபராதம் செலுத்தி இருப்பின் அவரை விடுவிக்குமாறும் பாலச்சந்திரனை அழைத்து வந்த குற்றப் புலனாய்வுத்துறை பொலிஸ் அத்தியட்சர் அஸ்லியை நீதிபதி பணித்திருந்தார்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி சரஸ்வதி நவரத்தினம்

அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவியான திருமதி சரஸ்வதி நவரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,அன்பர்கள் அனைவருக்கும்எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அந்தியேட்டிக் கிரியைகள் 08-05-92 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு

### அரச ஊழியர்களுக்கு

## மே மாத கொடுப்பனவுகள் 14 ஆம் திகதி வழங்கப்படும்

அரச சேவையாளருக்கு மே மாதச் சம்பளம் 14 ஆம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பண்டிகை தொடர்பாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வட-கிழக்கு அபிவிருத்திக்கு அறுநூறு கோடி நிதியுதவி

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கென அறுநூறு கோடி ரூபாவினை உலக வங்கி ஒதுக்கியுள்ளது என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மௌனகுருசாமி தெரிவித்துள்ளார்.

### அரச தோட்டங்களின் நிர்வாகம்

## 22 தனி நிறுவனங்களிடம் கையளித்ததாக அறிவிப்பு

(கொழும்பு)

அரசுக்குச் சொந்தமான தேயிலை றப்பர்மற்றும் தென்னந் தோட்டங்களின் நிர்வாகம் இருபத்திரெண்டு தனியார் நிறுவனங்களின் கைக்கு மாற்றப்பட்டிருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது.

1970 ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட இந்தத் தோட்டத் தொழில்துறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களில் இதுவே பெரிய மாற்றமாகும்.

449 அரசாங்கப் பெருந் தோட்டங்களை அரசு தனியார் துறை நடத்தவிருக்கும் நிர்வாகக் குழுக்களிடம் ஒப்படைத்துள்ளது. நிர்வாகம் மாற்றப்பட்டிருக்கிறதே ஒழிய தோட்டத்தின் உரிமை அரசிடம் தான் இருக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

## கிழக்கு பல்கலைக்கழகம் மூடப்படலாம்?

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணப்பகுதியில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல் சம்பவங்கள் தொடர்ந்தால் கிழக்கு இலங்கையின் பெரும் சொத்தாகக் கருதப்படும் பல்கலைக்கழகம் மூடப்படும் என்று வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் எச்சரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற ஒற்றுமை மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டார்.

### பட்டதாரிகளுக்கு

## வேலை வாய்ப்பளிக்க பதினேழு நிறுவனங்கள்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய பதினேழு நிறுவனங்களை. ஆட்களை வேலைக்கு அமர்த்தும் பிரதிநிதிகளாக அரசாங்கம் தெரிவுசெய்துள்ளது.

தொழில் அதிபர்களுக்கு பட்டதாரிகள் பற்றிய விபரங்களை வழங்கவும், தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலகங்களில் அவர்களை வேலைக்கு அமர்த்தவும் ஆர்வம் காட்டும் நிறுவனங்களையே அரசு இவ்

அத்துடன் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சிற்கு பட்டதாரிகள் பற்றிய விபரங்களை அறிக்கைகள் மூலம் இந்த நிறுவனம் சமர்ப்பிக்கும். பயிற்சி அளிப்பதற்கு வசதி ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த நிறுவனங்கள் செயற்படும்.

கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சுக்கு தேவையான சகல தகவல்களையும் வழங்குவதாகவே இந்த நிறுவனம் விளங்கும்.

...ஆண்டு நினைவஞ்சலி

வருவதாகத் தெரிய வருகின்றது. வடக்கு மாகாணத்தில் இது வரையில் எந்தவொரு கம் உதாவ கொண்டாட்டமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா

(குருநகர்)

சென்:றோக் சச நிலைய இளைய தலைமுறைக் கழகம் நடத்திய தவக்கால கலைப் போட்டிப் பரிசளிப்பு வைபவம் இன்று வியாழக்கிழமை மாலை 6-30மணிக்கு நிலைய யோகம் கலைஅரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக பேராலய பங்குத் தந்தை வண-எஸ்.எச்.ஜெபநேசன் அடிகள்உலகதரிசன யாழ்-பிரதிநிதி பென்-குணரெட்னம், குருநகர் பிரதேச கடற்புலிகள் பொறுப்பாளர் திரு.சிவலிங்கம்,யாழ்-மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு.கார்த்திக் ஆகியோர் கலந்துகொள்வர். (21)

## அன்னைதிரேசா சனசமூகநிலைய திறப்பு விழா

( அச்சுவேலி )

அச்சுவேலி அன்னை திரேசா சனசமூகநிலைய திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இவ்விழா ம.பி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் வி. செல்லத்துரை அவர்களின் வாழ்த்துப்பாடலுடன் வலி-கிழக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பேரின்பநாயகம், அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர் நா. மதனசேகரம் அவர்களும் சேர்ந்து மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

வலி - கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் வி. இராசரத்தினம் அவர்கள் சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்தார்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மன்னார் பரப்புக் கடந்தானில் நடந்த நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

**லெப். கேணல் கிறேசி**

**(கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)**

| வீரத்தின்மடியில்: | மரணத்தின்விடிவில்: | திதி: |
|---|---|---|
| 19 - 08 - 1960 | 19 - 04 - 1991 | 7-5-1992 |

வீரமறவனே! கிறேசியே!
பிறந்த நந்நாட்டை பொன் என மதித்து,
செந்தமிழ் ஈழம் காக்க சிரிப்புடன் சென்று
பரபபுக்கடந்தானில் மிடுக்காக மறைந்தீரோ!!
நீர் சென்ற சிலமாதத்தில் உமக்கொரு செல்வம்.
கோபாலறஞ்சினி எனும் உன் திருநாமம் சூடப்பட்ட
அழகான பெயராம்.
வீரவிடுதலைக்காய் வித்திட்ட வீரனே!!!
உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்

அன்பு

இல. 187, ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. (2541)
சகோதரர்கள், மனைவி, உறவினர்கள்

தெரிவித்துக்கொள்வதோடு அந்தியேட்டிக் கிரியைகள் 08-05-92 வெள்ளிக்கிழமை முற்பகல் 11·00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் மேற்படி நிகழ்ச்சியில் அனைவரும் கலந்துகொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் றோட், பண்டத்தரிப்பு. (2545)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 1-ம் ஆண்டுநினைவு அஞ்சலி

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?



தாயின் மடியில்

12 - 04 - 1969

வீரத்தின் வித்தாக
ஈழத்தின் முளையாக
வீரச் சாவு

06 - 05 - 1991

**2-ம் லெப். குகேந்திரன் உத்தமன்**

**12-ம் கட்டை இறக்கண்டி, நிலாவெளி**

தமிழ் இனத்தின் விடிவிற்காக தமிழ் ஈழத்தின் வித்தாக சகதோழர்களுடன் எதிரி படை களம் பல கண்டு எதிரிகளை சிதறடித்து வீறுகொள் புலியாக இம்மண்ணின் வித்தாகி விட்டாயே.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

உன் ஆத்மா சாந்தி வேண்டி
இறைவனை வேண்டுகின்றோம்
அப்பா, அக்கா, மருமக்கள், மாமி, குடும்பத்தினர்

( சி / 4375 )

நிறுவனங்களையே அரசு இவ்வாறு நியமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரை பட்டதாரிகளுக்கும்,தொழில்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தும் ஒரு மாற்றாகவும்,

பட்டதாரிகளை தொழிலில் அமர்த்துவதோடு அவர்களை பரிமாற்றம் செய்து கொள்வது, இடமாற்றம் செய்வது, பட்டதாரிகள் பற்றியும், அவர்களது தொழில் திறமை குறித்தும் இந்த நிறுவனங்கள் அவதானிக்கும்.

வனம் விளங்கும்.

## மணவாளக்கோல திருவிழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை சிறிதுர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழா வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ளது.

துர்க்காதேவி தேவஸ்தான கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டே மணவாளக்கோல திருவிழா நடைபெறுகிறது.

## நினைவு கூருகின்றோம்...

## 1992-05-07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு கரடியனாற்றுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான மோதலின் பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பட்டாபி** (செல்வராசா ரூபாகரன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களபபு.)

1987 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் வெடிகுண்டு ஆய்வின் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

**அல்வின்** (அமிர்தலிங்கம் சற்குணராசா - வதிரி, கரவெட்டி.)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4373)

### சிந்தனைக்கு

அறியாமை துணிச்சலானது;
அறிவு அடக்கமானது.

— துஸிடிடிஸ்

ஈழநாதம்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 07-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 65

## கற்றுக்குட்டியின் கூச்சல்

"போதிய ஆதாரங்கள் இன்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய முடியாது'' என மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் அண்மையில், பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தமை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கும், தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கும் பெரும் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர் எஸ். பி. சவானின் கூற்றைக் கண்டனமும் செய்துள்ளார்கள். ஆனால் அமைச்சர் எஸ். பி. சவானின் கூற்று புலிகள் மீது அவர் கொண்ட பற்றினால் வந்ததல்ல, இந்தியாவின் நலனுடன் சம்பந்தப்பட்டது என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதென்பது இரு விடயங்களுடன் சம்பந்தப்பட்டது. ஒன்று, ராஜீவ் காந்தியின் கொலை; மற்றது இந்தியாவின் பிராந்திய நலன். இதில், ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக இரு விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இவ் விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டு சுமார் 10 மாதங்களுக்கு மேலாகியும், அவை தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் இக் கொலைக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றிக் கருத்துக் கூறவுமில்லை.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டவுடன், அன்றிருந்த அரசியல் சூழ்நிலையில்- தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்தது- ராஜீவ் காந்தியைச் சார்ந்திருந்த அரசியற்கட்சிகள் தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கில், இக்கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும், விடுதலைப்புலிகளுக்கும் தமது அரசியல் எதிரிகளுக்கும் - தி. மு. க-தொடர்பு உண்டு என்றும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் இறங்கின. தேர்தலில் வெற்றியும் பெற்றன.

இதேவேளை, ராஜீவ் கொலை வழக்கில், புலனாய்வை மேற்கொண்டவர்களின் கவனமும், அரசியற் சக்திகளினால் திசை திருப்பப்பட்டதினால் ராஜீவ் கொலை விசாரணை திறந்த நிலையில் இடம்பெறுவதற்குப் பதிலாக, விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்துவதற்கு சாட்சிகள், ஆவணங்கள் தேடும் விசாரணையாகவே இடம்பெற்றது இதற்கு 'தடா' சட்டமும் சாதகமாகப்பயன் படுத்தப்பட்டது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தற்பொழுது அமைச்சர் எஸ். பி. சவான் புலிகளைத் தடைசெய்ய போதிய ஆதாரங்கள் கையில் இல்லை என்ற தொனி...

# எந்த ஒரு இராணுவ சக்தியாலும் புலிகளை அழித்துவிட முடியாது

## தமிழீழ விடுதலைப்போர் பற்றி இந்திய அதிரடிப்படை தளபதி

சிறிலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தரைக் கட்டுப்பாட்டை பேணுவது இன்னமும் தீர்க்கப்படாத நிலையிலும், விடுதலைப்புலிகள் இலங்கைத் தமிழர்களிடையே கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் பற்றி விளங்கிக் கொள்ள இந்தியாவில் முயற்சி எடுக்கும் எவரும் துணைக்கண்டத்தின் வடபகுதியில் பல்வேறு மாற்றங்களைக் காட்டும் சம்பவங்களை வெளிப்படையாக உணர்வர். 1987-ம் ஆண்டுக்கு முன்பாக வாழ்க்கைப் போராட்டத்தில் மிகவும் கஷ்டப்படுகின்ற தமிழ் மக்களின் போராட்ட சக்தியாகவும் - சிறிலங்கா இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் விடுதலைப் புலிகளை கணிப்பிட்டு ஆதரவு காட்டப்பட்டு வந்தது. 1987 க்குப் பின்னர் இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டதையடுத்து சாரம் கட்டிய சிறுவர்கள் என்றும் தமக்கு உணவூட்டிய கைகளையே திருப்பித் தாக்குகிறார்கள் என்றும், பலம்வாய்ந்த இந்திய அரசை எதிர்த்து வீரம் பேசும் இவர்களுக்கு இந்திய இராணுவம் பாடம் புகட்ட வேண்டுமென்றும் கருதப்பட்டது.

ஆனால் 1990 இல் இந்திய இராணுவத்தின் இழப்பு4000 ஐத் தாண்டிய நிலையிலும், இந்திய இராணுவத் தளபதி ஏ. எஸ் கல்கத்தின் சந்தேகத்திற்கிடமான அறிக்கைகள் வெளிவந்த நிலையிலும், விடுதலைப் புலிகள் பற்றிய பார்வை அதிருப்தியோடான பொறாமை, வியப்பு, மற்றும் இரக்கம் கொள்ளல் என்பன கலந்ததொரு நிலைக்கு மாற்றங் கண்டது. நன்கு போரிட்ட ஒரு இயக்கமாக இருந்தாலும் வன்னிக் காடுகளுக்குள் மட்டுப்படுத்தப்படுமளவுக்கு பலவீனப்பட்டு விட்டதாகவும், சிறிலங்கா இராணுவத்தினரால் இலகுவில் நசுக்கப்பட்டு விடலாம் என்றும் கருதப்பட்டது.

சிறிலங்காஇராணுவத்தினர் ஜே. வி. பி. யினரைக் கொன்றொழித்துக் கட்டுப்படுத்தியதுடன், ரஞ்சன் விஜயரத்தி...

...வைத்துக் கொண்டது மட்டுமன்றி தொல்லை தரும் வகையில் சக்தி பெற்றதாகவும் இருந்தது.

இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் குச்சொழுங்கைகளும், மட்டக்களப்பு, வன்னிக்காடுகளும் இருவேறு உலகங்களாக இருந்தன. ஒன்று பாதுகாப்பான தலைமையகங்களில்வரைபடங்கள், சிரேட்ட அதிகாரிகள், காடுகளுக்கு மேலாக அடிக்கடி பறக்கும் உலங்கு வானூர்திகள் என்பனவாக புலிகளின் தாக்குதல்களை அரிதாகச் சந்திக்கும் ஒன்றாக இருந்தது. மற்றைய உலகமோ சூடான சகதி நிறைந்த பதற்றம் மிகுந்த சண்டைகளை அடிக்கடி சந்திக்கின்ற ஒன்றாக காடுகளின் கீழும் குச்சொழுங்கைகளிலும் இருந்தது. இங்கு எந்தத் தரப்பிறகும் மற்றவர்களிற்கு நேரும் இறப்பு, காயம் அடைபவர் எண்ணிக்கை பற்றி எதுவும் தெரியவருவதில்லை. ஆனால் எதிர்ப்பைத் தாண்டிவிடுபவர்கள் இருதரப்பினரதும் பலம் பலவீனங்களை நன்கு அறிவர்.

விடுதலைப்புலிகளுக்கான ஆதரவு அவர்களின் ஆற்றல்கள் பற்றி எல்லாம் மக்கள் தகவல் சாதனங்கள் வழியாக அறியவேண்டிய நிலையில் இருந்த போது, இந்திய அமைதிப் படையின் தலைமையகத்தால் ஒழுங்கு செய்யப்படும் சுற்றுலாக்களில் வரும் பத்திரிகையாளர்கள் தெரிந்த கருத்துக்கள் பௌதிகரீதியாகவும், சிந்தனை பூர்வமாகவும் உண்மைக்கு வெகுதொலைவிலும் இருந்தன. களத்தில் உண்மையாக என்ன நடக்கின்றது என்பதைவிடவும் எவற்றைக் கூறினால் 'சவுத் பிளாக்' திருப்தியடையும் என்பதையறிந்து ஒரு கொடூரமான வஞ்சப் புகழ்ச்சியையே அவர்கள் மேற்கொண்டனர்.

ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது இந் மோசமான...

...மிருந்து அர்ப்பணிப்போடும், தமது இலட்சியத்தில் பிடிப்போடும், சாகத்துணிந்தவிருப்போடும் விடுதலைப் புலிகளுக்கு தொண்டர்கள் சேருவதற்கு பயங்கரவாதம் மட்டும் தான் காரணம் என்று விளக்க முடியாது. 1987 இல் சாதாரணமாகப் பார்த்தாலேசிங்கள இராணுவம் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் தெரியவரும்.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலான அரசியல் போரில் நிலத்தின் மீதான ஆதிக்கம் என்பது முக்கியமானது என்பதைப் பொதுவாக பலரும் விளங்கிக் கொள்ளவில்லை. சிறிலங்கா நிலம்முழுவதையும் முடிக்குரியது அல்லது அரசுக்குரியது எனக் கருதும் சிறிலங்கா இராணுவத்தின் உதவியுடன் சிங்களவர்களைக் குடியமர்த்துவதிலும் தமிழர் பிரதேசங்களிலும் கூட தமிழர்களை லாவகமாகத் தவிர்ப்பதிலும் கவனம்செலுத்தி வருகின்றது. சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதனூடாக இனங்களுக்கிடையேயான சமபலத்தை மாற்றவும், வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டாடவும் சிறிலங்கா அரசு ஒரு தலைப்பட்சமான செயல்களை மேற்கொண்டு வருகின்றது. தமிழர்கள் எதிர்ப்பைக்...

...விடுதலைப்புலிகள் தான் எப்போதும் எம் உடன் இருப்பவர்கள். அவர்கள் தான் சிங்களவர்களிடமிருந்து எமது நிலத்தைப் பாதுகாப்பவர்கள் என்று எத்தனையோ குடிமக்கள் கூறியதைக் கேட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இடம் பெறாமல் தடுக்க ஏன் முடியாமலிருக்கிறது என்பது இங்கேஅடுத்தகேள்வியாகிறது.

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான கடற்பாதை துண்டிக்கப்பட்டு விட்டதாக எமது கடற்படைபல தடவைகள்கூறியிருக்கின்றது. கடலோரப்பாதுகாப்பு படை குற்றவுணர்ச்சியோடு இதை இப்போது ஏற்றுக்கொள்கிறது.

கடற்படையிடம் தற்போது இருக்கும் கப்பல்கள் உட்புகுவதைத் தடுப்பதற்குப் போதுமானதாக இல்லை என்பதை இப்போது ஏற்றுக் கொள்வது ஒரு தொழில்முறை ஏமாற்று ஆகும்.

தமிழ்நாட்டின் கரையோரமும் யாழ்ப்பாணம் மன்னார் பகுதியும் ஆழம் குறைந்த நீர்ப்பரப்பும் பாறைகளும் மலிந்த பாக்குநீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது. நாற்பது கிலோ மீற்றர்தான் ஆகக்...

...ஒரு காரணம். விடுதலைப் புலிகள் வெடிமருந்துகள் பற்றிய அடிப்படை அறிவும், அவற்றை வெடிக்க வைக்க போதிய திறமையும் கொண்டுள்ளனர். மேலும் இயல்பான அவர்களது புத்தி சாதுரியமும் நீண்டகாலப் போர் பயிற்சியும் கூட கண்ணி வெடிகளைப் போல அமைதிப்படையைத் திகைக்கவைத்தது. உண்மையில் இது நிலக்கண்ணிவெடிகளல்ல. நிலத்திற்கு அடியில் புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் மின்சாரத்தின்மூலம் வெடிக்க வைக்கப்படுகின்றன. வவுனியாக் காடுகளில் இறங்கிய காலாட் படையினரும், பரா இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளின் போராளிகள் அவர்கள் ஆணாக இருந்தாலென்ன பெண்ணாக இருந்தாலென்ன மதிப்பு வைக்கத் தவறமாட்டார்கள். விடுதலைப் புலிகள் கைதிகளை ஒருபோதும் துன்புறுத்தியது கிடையாது' தமது தலைமையிடத்திற்கு அவர்கள் அனுப்பும் வானொலித் தகவல்கள்திட்டவட்டமானதும் சரியானதுமாக இருந்தது. சென்னையில் இருந்த இந்திய இராணுவ தலைமையகத்தால் வெளியிடப்பட்ட தகவல்கள்கூட அப்படியில்லை என்பது துக்ககரமானது. அங்கிருந்த ஜெனரல்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ள நாட்டு மக்கள் விடுதலைப்புலிகள் அடைக்கப்பட்டுவிட்டதாகநம்பிக்கொண்டார்கள் ஆனால் தளத்திலிருந்தவர்கள் உண்மையை அறிவார்கள். அவனது கருத்தை யாரும் செவிமடுப்பதில்லை. இதேவேளைகடும் உடல், உளச் சோர்வுகளுக்கும் மத்தியில் போரிட்ட துருப்புக்களுக்கு மத்தியிலும் தமது துருப்புக்களை நன்கு ஒழுங்குபடுத்தி சண்டையிட்டமைக்காகஜெனரல்கள் பதக்கங்களை சேகரித்துக்கொண்டனர்.

விடுதலைப் புலிகளை பாதுகாப்பதோடு அல்லது மகிமைப்படுத்துவதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஒருவர் பயங்கரவாதி என்று வர்ணிப்பார் இன்னுமொருவருக்கு விடுதலைப் போராளியாக இருப்பர். சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இப்போது வெறுப்பு வளர்ந்திருந்தாலும் 1989 இல் ரி. என். ஏ. யை நிர்மூலமாக்க...

> "தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கவே விடுதலைப் புலிகள் போராடி வருகிறார்கள். அவர்களை எந்தவொரு இராணுவ சக்தியாலும் அழித்துவிட முடியாது. ஏனென்றால் அவர்களுக்குப் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு நிற்கிறது'' இவ்வாறு கூறுகிறார் இந்திய தளபதி அர்ஜுன் கட்டோச். இந்திய இராணுவத்தின் விசேட அதிரடிப்படைக்குத் தலைமை தாங்கி வவுனியா, மாங்குளம், முல்லைத்தீவு, அலம்பில் பகுதிகளில் புலிப்படை வீரர்களுடன் பல்வேறு சண்டைகளில் அனுபவம்பெற்ற தளபதி அர்ஜுன் புலிகள் இயக்கத்தின் போர்த்திறன் பற்றியும்,போராட்ட இலட்சியம் பற்றியும் இந்தக் கட்டுரையில் விபரிக்கிறார்.

போதிய ஆதாரங்கள் கையில் இல்லை என்ற தொனியில் பேசியுள்ளமை, ராஜீவ் காந்தியின் கொலையால் அரசியல் லாபம் பெற்றவர்களுக்கு பேரிடியாக உள்ளது. இதனைத்தொடர்ந்தே ஆதாரம் உள்ளதாகவும், உடனடியாகத் தடை செய்யவேண்டும் எனவும், கூக்குரல் இடத்தொடங்கியுள்ளனர். இதற்காகவே, தமிழ் நாட்டிலுள்ள தமது தோழமைக்கட்சிகளைக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றியும் வருகின்றனர்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது என்பது செல்வி ஜெயலலிதாவின் அரசிற்கும், வாழப்பாடிக்கும் தமிழக அரசியலில் லாபம் தேடும் விவகாரமாகவும், திராவிட இயக்கங்களை ஒடுக்குவதற்கும், பிராமண ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும் ஆன ஒரு விவகாரமாகவுமே உள்ளது ஆனால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ராஜீவ் காந்தியின் கொலையுடன் மட்டுமல்ல தென்னாசியப் பிராந்திய அரசியலுடனும் குறிப்பாக இந்தியாவின் எதிர்கால நலனுடனும் சம்பந்தப்பட்ட விவகாரமானதுமாகும்.

மத்திய அரசைப் பொறுத்து முதலில் விசாரணைக் கமிசனின் தீர்ப்புக்களில் விடுதலைப் புலிகளுக்கும், இக் கொலைக்கும் நேரடியாகத் தொடர்புகள் இருப்பதாக நிருபிக்கப் படவேண்டும். இதனை மத்திய அரசு எவ்வாறேனும் சரிக்கட்டிக் கொண்டாலும், விடுதலைப் புலிகளைத் தடை செய்வதினால் தென்னாசியாவில் இந்தியாவின் நலன் பாதிக்கப்படமால் பார்த்துக் கொள்ள வேண்டும். முன்னரே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கை தோல்வி அடைந்தது என்றும், இதன் காரணமாக இந்திய இராணுவம் அவமானப்பட்டு இலங்கையில் இருந்து வெளியேற வேண்டிய நிலை வந்தது எனவும், இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கருத்துக்களும், கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்பொழுதும் அவசரப்பட்டு போதிய ஆதாரங்கள் இன்றி விடுதலைப் புலிகளைத் தடை செய்வது மீண்டும் ஒரு தோல்விக்கு இட்டுச் சென்றுவிடும் என்பதை மத்திய அரசு இப்பொழுது உணர்வதாகத் தெரிகிறது.

ஆனால், தமிழக முதல்வரினதும் வாழப்பாடியினதும் கூச்சலானது, நீதிமுறைக்கு அப்பாற்பட்டதாகவும், தமது எதிர்கால அரசியல் லாபத்தை மட்டுமே கருத்திற் கொண்டதாகவும், இலங்கைத் தமிழருக்கு துரோகம் இழைப்பதாகவும், இந்திய நலனைப்பற்றி எந்த வித அக்கறை கொள்ளாததாகவும், அவசரத்தனமானதாகவும் பதற்றம் மிக்கதாகவும் உள்ளது. இந்நிலையில் மத்திய அரசின் இந்தியாவின் நலன் பற்றிய சிந்தனை கூட செல்வி ஜெயலலிதாவிற்கும், வாழப்பாடி இராமமூர்த்திக்கும் அபர்த்தமாகத் தெரிகிறது. இச் சம்பவமானது அரசியல் முதிர்ச்சி பெற்ற நரசிம்மராவின் மத்திய அரசிற்கும், அரசியலில் கற்றுக்குட்டியான ஜெயலலிதாவிற்கும் இடையிலான இடைவெளியாகவே தெரிகிறது.

---

யதுடன், ரஞ்சன் விஜயரத்தினாவின் பின் பலத்தையும் கொண்டிருந்தனர். ஆனால் யாழ்ப்பாண கோட்டை, மாங்குளம் முகாம் என்பவற்றை சிறிலங்கா இராணுவம் மிக விரைவில் இழக்க வேண்டி வந்ததும் இந்திய இராணுவம் மூன்று வருடங்களில சந்திக்காத இழப்பை சிறிலங்கா இராணுவம் ஆறு அல்லது ஏழு மாதங்களில் சந்தித்ததுமான நிகழ்ச்சிகள் அரங்கேறின. ஆனையிறவிலும், மணலாறில் 14 தளத்தினைக் கைப்பற்றவும் நடந்த சண்டைகளுக்குப் பின்னால் சிறிலங்கா இராணுவம்படைமுகாம்களுக்குதிரும்ப வேண்டி நேரிட்டது இந்த நிலைமையானது சிறிலங்கா இராணுவத்தினர் பெருமளவு இழப்பிற்குப் பின்னரும் நகர முடியாத நிலையில் இருப்பதையே உணர்த்துகின்றது.

சிறிலங்காவைக் காட்டிலும் இந்தியதொடர்பு சாதனங்கள் இம்முறை போர் மூண்டதற்கும், யுத்த நிலைமை நீடிப்பதற்கும் விடுதலைப்புலிகளையே பெருமளவில் குற்றஞ்சாட்டி வந்துள்ளன.

இதன் காரணமாக விடுதலைப்புலிகள் பற்றிய கருத்தும் எதிர்மறையாக மாறத் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் அராஜகங்களை பற்றிப் பரப்பப் பட்ட பலமான வதந்திகளுக்குப் பின்னரும் சிலர் மிகக்கடினமான சூழலிலும்எப்படி வாழவும் போராடவும்இவர்களால் முடிகின்றது என்பதுபற்றிசிந்திக்கலாயினர். விடுதலைப்புலிகளுடன் பேரிடும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த இந்திய ஜவான்கள் பலருக்கும் ஏன் இவர்கள் இந்தக் கடினமான போராட்டத்தை நடத்துகின்றனர் என்பதை மதிப்பீடு செய்யப் போதுமான அவகாசம் இருந்தது. இவர்களில் அதிகாரிகள் மட்டத்தில் இல்லாத சிலரும் அடங்கி இருந்தனர். இந்த இயக்கம் கடினமான சூழலிலும் தன்னைத் தக்க

வையாவது இந் மோசமான நிலைமை வெளிக்காட்டப்பட்டது நல்லது. செப்டம்பர் 1988ல் பி பி சி. ஒரு முகாமை முற்றுகையிட்ட இந்திய இராணுவத்தினர் ஏராளமான ஆயுதங்களை வாரிஎடுத்ததாக அறிவித்தது. கற்பனையான இந்த அறிவிப்பு சென்னையிலிருந்து தான் பிறந்தது.

இது ஒரு தற்செயலான நிகழ்ச்சிபோதையேறிய நிலையிலிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் செய்தியளர் ஒருவரிடம் உளறியதால் வந்த வினை எதிர்பார்த்ததைப் போலவே இந்திய இராணுவத் தலைமையகம் குழம்பிப்போய் விசாரணைக்கு உத்தரவிட்டது ஆனால்வவுனியாவில் இதனை நிரூபிக்க சிரமப்பட வேண்டியிருந்தது இத்தகவலை வெளியிட்ட சேணல் இப்போது பிரிகேடியராகவுள்ளார்.

உண்மையான தள நிலைமைகள் மிகவும் வேறானவையாகவே இருந்தன. தைரியம் மிக்க-முறைப்பாடு செய்யாத-களைப்படைந்த சிப்பாய்களே இந்திய இராணுவத்தினரின் வெற்றிக்கு தனிப்பொறுப்பு என்பதுடன் அவர்களே விடுதலைப் புலிகளையும் சாதாரண பொது மக்களையும் தொடர்ந்து சந்தித்தும் வந்தனர்

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், வவுனியா, மாங்குளம், முல்லைத்தீவு, அளம்பில் பகுதியில் ஆரம்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட சண்டையிட்ட படையினர்களுக்கு கட்டளையிடும் அதிகாரியாக பணியாற்றக்கிடைத்த சிறப்பு சந்தர்ப்பத்தால் இக் கட்டுரையாளர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றி நன்கு அறிந்துள்ளார்.

விடுதலைப் புலிகளைக் கொடிய அரக்கர்கள் என்று வர்ணிப்பேர் அவர்களால் எப்படி இவ்வளவுநீண்டகாலம் தாக்குப்பிடிக்க முடிகிறதுஎன்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ் இளைஞர்களி—

...யும் இந்தக் கட்டுரையில் வெளியாகிறது.

காட்டும் போது அனுப்பப்படும் சிறிலங்கா இராணுவம் தமிழர்களைச் சமாளிப்பதற்கு பதிலாக கொன்றொழிக்கிறது. றோஎனப்படும்உளவு அமைப்பை பத்தவிர வெளியில் இருக்கும் இந்தியர்களில் மிகச் சிலருக்குத்தான் இது தெரிய வருகின்றது. விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்திடமிருந்து பாதிக்கப்படும் தமிழ் மக்களைக் காக்கும் கேடயமாகத்தான் செயற்படுகின்றார்கள். இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணம் சென்ற போது உள்ளூர் மக்கள் அதிக சந்தோஷத்துடன் வரவேற்றனர் ஏனெனில் சிங்கள இராணுவத்தை தமது மண்ணிலிருந்து வெளியேற்ற இந்திய இராணுவம் துணை நிற்கும் என்று உள்ளூர் மக்கள் கருதினர்.

அக்டோபர் 10, 1987-ல் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்கத் தொடங்கியது. ஆனால் அது வெற்றியடையவில்லை நாம் பெரிய இராணுவ அமைப்பாக இருந்த போதிலும் தமிழர் உரிமைக்காகபோரிடும் அமைப்பு என்று நிருபிக்கப்பட்ட உண்மையினால்மக்கள்ஆதரவு விடுதலைப்புலிகளுக்கே இருந்தது. விடுதலைப்புலிகளைப் போன்று ஒழுங்கமைக்கப்பட்ட எந்த அமைப்பையும் எந்த இராணுவத்தினாலும் மக்களின் முழுமையான ஆதரவு இல்லாமல் வெற்றி கொள்ள முடியாது. ஆனையிறவுப் பகுதியிலும் முல்லைத்தீவுப் பகுதியிலும் பெருத்த இழப்புக்களைச் சந்தித்த பின்னர் இப்போதுதான் சிறிலங்கா இராணுவம் ஓரளவுக்கு இதை உணரத் தொடங்கியது. ''நீங்கள் இப்போதோ அல்லது சற்றுக் காலங் கடந்தோ விலகிப் போய்விடுவீர்கள். ஆனால்

குறைந்த தூரம் விடுதலைப் புலிகள் மூன்று வெளி இணைப்புஇயந்திரங்களைக்கொண்ட கண்ணாடி இழைப்படகுகளைப் பாவிக்கின்றனர் இப்படகுகளில் எந்த ராடார்கருவியும் இருப்பதில்லை என்பதுடன் அறுபது கடல்மைல் வேகத்தில் 25-30 நிமிடங்களில் ஒரு கரையிலிருந்து மறுகரையை அடைந்து விடுகின்றன கடற்படையிடம் இருக்கும் பாரிய கப்பல்கள் சமுத்திரப் பகுதியில் செயற்பட ஏற்றவையே அல்லாமல் இதுபோன்ற கடல்களில் சுதந்திரமாக நடமாட முடியாதவையும் விடுதலைப் புலிகளின் படகுகளின் வேகத்தின் அரைப்பங்கு வேகத்தில் கூட செலுத்த முடியாதவையும் ஆகும்.

மனதுக்குப்பிடித்தமானதாக இல்லாவிட்டாலும் உண்மையில் இதுதான் விடுதலைப்புலிகள் எப்போதும் நட்டத்தைப் பற்றிய பயமில்லாமல் கரைகளை இலகுவாகக் கடப்பதற்கு இயலக் கூடியதாக உள்ளது. நிலைமையில் எந்த மாற்றமும் இல்லாதபோது இசுரேலிடமிருந்து பெற்ற சிறிய வேகம் கூடிய படகுகளை சிறிலங்கா பயன்படுத்தியும்கூட இதனைத் தடுக்க இயலவில்லை.

சாதாரணமாக விடுதலைப் புலிகள்தலைவரின் கட்டளைக்குட்பட்டு சாகத் தயங்காதவர்கள் என்பதும் சரிதான், ஆனால் இலங்கை முழுவதுமே கல்வியறிவு கூடியவர்கள் வாழும் பகுதி என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணப் பகுதியின் பல்கலைக்கழகம்தான் விடுதலைப் புலிகள் ஆட்களைச் சேர்க்கும் பிரதான களமாக உள்ளது. விடுதலைப் புலிகள் வெடிகுண்டுகளில் நிபுணர்களாக இருப்பதற்கு அவர்களில் பலர் விஞ்ஞான பட்டதாரிகளாக இருப்பதும்

வளர்ந்திருந்தாலும் 1989 இல் ரி. என். ஏ. யை நிர்மூலமாக்க சிறிலங்கா இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் சேர்ந்து செயல்பட்டனர். விடுதலைப் புலிகளை சிறிலங்கா அரசும், இந்திய அரசும் பயங்கரவாதிகள் என்றே கருதுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே அளவுக்கு இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் அவர்கள்தான் என்பதும் உண்மை.

இத்தனை கடுமையான நிலைமையின் பின்பும் விடுதலைப்புலிகள் நீடித்து நிலைப்பதன் மூலம் இது நிலவுரிமைக்கான போராட்டம் என்பது தெளிவாகப் புலப்படும். சிறிலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்புடன் தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்களக் குடியேற்றக்காரர்களிடமிருந்து தமது தாயக நிலத்தைப் பாதுகாக்கப் போராடுபவர்கள் விடுதலைப் புலிகள் என்பதுவே இலங்கைத் தமிழ் மக்களிடையே அவர்களுக்கு இருக்கும் ஆதரவின் அடிப்படை அம்சம் ஆகும். சிறிலங்காவில் பெரும் கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்தக்கூடிய இவ் விடயத்தில் மிகுந்த அவதானிப்பும் சரியான கணிப்பீடும் அவசியமானதாகும்.

---

## பழனி இடைத்தேர்தல்

(சென்னை)

பழனிமக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 8ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்வது நாளை தொடங்குகின்றது என்றும் 14ஆம் திகதி வரை இந்த நீடிப்புத்தொடரும் என்றும்,தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# தமிழ் மொழி எழுச்சி பெற்ற காலத்தில் தமிழிசையும் உயர்ச்சி பெற்றது

## - தமிழிசை இறுதிநாள் நிகழ்ச்சியில் யோகி

சங்க காலத்தில் தமிழ் மக்கள் ஆடினார்கள், பாடினார்கள் போராடினார்கள். தமிழ் எழுச்சி பெற்றுத் திகழ்ந்தது தமிழிசை உயர் நிலையை அடைந்திருந்தது என்று யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தி வரும் தமிழிசை விழா இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யோகி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது; சிறப்பாக இசையில் வளர்ந்திருந்த தமிழினத்தின் இசைச் சிறப்பு சமண, பௌத்த மதங்களால் அழிக்கப்பட்டன. இசை மனிதரிடம் உணர்சிப் பெருக்கையும், வளத்தையும் உண்டாக்குவதால் அது காமத்தை வளர்க்கிறது என்று சமணரும், பௌத்தரும் கருதியதன் விளைவே தமிழிசை நூல்களின் அழிவுக்கு ஒரு காரணமாயிற்று

நான் ஒரு காலத்தில் தேவாரம், திருவாசகங்களைத் தனியே மதம் சார்ந்த நூலாகப் பார்த்ததுண்டு. ஆனால் இவை எமது மரபு வழி பண்பாட்டை, இசையை வளர்த்த எம் சொத்துக்கள் என்பதை இப்போது உணர்ந்துள்ளேன் இந்துவாக இருந்தாலும், கிறிஸ்தவராக இருந்தாலும் வேறு எந்த மதம் சார்ந்தவர்களாக இருந்தாலும் தமிழர்கள் இவற்றை மதம் சார்ந்த நூலாக பார்க்காமல், எமது மரபுவழி சொத்தாக பழந்தமிழர் வாழ்க்கையை காட்டும் பண்களாகப் பார்க்க வேண்டும் என்றும்,

நாம் மொழியை மதிப்போம் மாபெரும் தமிழிசை விழா நடக்கும் இவ்வேளையில் மீண்டும் ஒரு முறை பண் இன்றேல் இசை இல்லை என்பதையும், பண்ணின் பயனாம் இன்னிசை என்பதையும் நினைவு கூருவோம். மத்திய காலத்தில் தென்னிலங்கையில் அரசு செய்த ஆறாம் பராக்கிரமபாகுவின் அரசகுருவான்தோட்டகமுவ ராகுல தேரர் பாடிய செலசிரிய சந்தேசய என்னும் பிரபந்தத்தில் தமிழ்ப் பக்திப் பாடல்களில் வரும் பண்ணையும், அப்பண்களோடு ஒலித்த மிருதங்கத்தையும், தாளத்தையும் பாராட்டி அவைக்கேட்டு மகிழுமாறு இருபத்திரெண்டு, இருபத்திமூன்று, இருபத்தி நான்காம் பாடல்களில் குறிப்பிடுகிறார் என்றும் —

பட்ட மரத்தில் பைந்தமிழ் பாடியவன் தமிழன்; செத்த பிராணியின் தோலில் செந்தமிழ் பாடியவன் தமிழன். மனித நாகரிகத்தில் வண்டில் சில்லைக் கண்டமை ஒரு வாழ்க்கைத் திருப்பம் உலகத்தவர் சில்லைக் காணுமுன் முழவு வாத்தியத்தைக் கண்டவன் தமிழன் முழவு, முரசு, பேரிசை, மேளம், மத்தளம், முதலிய முப்பத்தாறு தோற் கருவிகள் தமிழன் கண்டவை. பட்டுப்போன மூங்கிலில் வண்டுகள் துளையிட, அந்தத் துளைகளுக்கூடாக காற்றுப் போய், குழலூதிய இயற்கையைக் கண்டு குழல் செய்தவன் தமிழன். குழல் இனிது என்று பாடியவனும் தமிழன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ. நா. வின் அணுகுமுறையில் பாகுபாடற்றதன்மைவேண்டும்

## இந்தியா, ரஷ்யா வற்புறுத்து

(டில்லி)

அனைத்து நாடுகளிடையேயும் பாகுபாடற்ற அணுகுமுறையை கடைப் பிடிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை உறுதி பூண வேண்டுமென நேற்று முன் தினம் புதுடில்லியில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் புவிரிலிஸுக்கும் இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் எட்வடோ வெலேரோவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது கேட்டுக் கொள்ளப்பட்டது

மேலும் மண்டல சார்பற்ற இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் இரு தலைவர்களும் வலியுறுத்திப் பேசியதோடு அண்டை நாடுகள் ஆதரித்து உதவி வழங்கும் பயங்கரவாதத்தினால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் வருத்தம் தெரிவித்தார்

இதற்கு பதிலளித்த ரஷ்ய வெளியுறவு அமைச்சர் புவிரிலிஸ் உலகத்தின் எந்தப் பகுதிகளில் பயங்கரவாதம் தலையெடுத்தால் தமது நாடு அதை ஆட்சேபிப்பதுடன் பேச்சு வார்த்தைகள் மூலம் இரு தரப்பு பிரச்சினைகளும் தீர்த்துக் கொள்ளப்படுவது விரும்பத் தக்கது எனவும் தெரிவித்தார்,

இதே வேளை இரு நாடுகளுமே உருவாகிவரும் புதிய உலக முறைமையில் ஜனநாயகமயமாக்கும் கொள்கையினை இந்தியாவும் ரஷ்யாவும் வலியுறுத்தியுள்ளன.

## இந்திய - ரஷ்யா

# அமெரிக்க டொலர்களில் வங்கிக் கணக்குகள்

(டில்லி)

இந்தியாவும் ரஷ்யாவும் வங்கிகளில் உள்ள தங்களது அனைத்துக் வாணிபக் கணக்குகளையும் அமெரிக்கடொலர்களில் வைத்துக் கொள்ள இணங்கியுள்ளதாக அறிவித்துள்ளன.

புதுடில்லியில் நேற்று முன் தினம் இந்திய வர்த்தகத் துறை செயலாளரும் ரஷ்யாவின் வெளியுறவு பொருளாதார துறை அமைச்சரும் இது குறித்த பத்திரம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

# இன்னொருபத்திரிகைமீதும் உரிமைமீறல் நடவடிக்கை

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் இன்னொரு பத்திரிகை மீதும் உரிமை மீறல் பிரச்சினை கிளப்பப் பட்டுள்ளது.

பம்பாயிலிருந்துவெளியாகும் கறன்ட் (Current)ஆங்கிலவார இதழ்மீதுநேற்றுமுன் தினம்தமிழக சட்டசபைக்குக் கொடுக்கப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை பேரவைச் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உரிமைக் குழுவின் விசாரணைக்கு சமர்ப்பித்தார்

பேரவையைப் பற்றியும், சபாநாயகர் பற்றியும் மற்றும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பற்றியும் மிகவும் தரக்குறைவாக அந்த ஆங்கில வார இதழ் தலையங்கம் எழுதியுள்ளதாக உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவந்த ஆளும் கட்சி உறுப்பினர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

இதே வேளை தமிழ் நாடு சட்டப்பேரவைச் செயலருக்கு உச்ச நீதி மன்றம் முன்னர் அனுப்பியிருந்த அழைப்பாணை அதிருப்தியும் தெரிவித்துள்ளது

மேலும், கோவை மாலை முரசு ஆசிரியருக்கு எதிரான கைது உத்தரவுக்கு இப்போதைக்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்குவதை நீதிமன்றம் ஒத்திப்போட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த விவகாரத்துக்கு வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முடிவு தெரிவிக்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# கர்நாடகாவில் 27பேர் உயிரிழப்பு

(பெங்களூர்)

கர்நாடகத்தில் பெங்சால் கிராமமொன்றில்இடம்பெற்ற சாலை விபத்தில் திருமணக் குழுவைச் சேர்ந்த இருபத்தியேழு பேர் உயிர் இழந்துள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த வாகனம் வாய்க்கால் ஒன்றில் விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதென்றும் இறந்தவர்களில் பதினொரு பெண்களும் பதினொரு குழந்தைகளும் அடங்குவார்கள். என தெரிவிக்கப்படுகிறது.

# விசம பிரசாரத்தில் பத்திரிகைகள் ஈடுபாடு

## -- ஜெயலலிதா கண்டனம்

(சென்னை)

தமிழ் நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் ஆபத்திற்கு உள்ளாகியிருப்பதாக விஷமத்தனமான பிரசாரத்தில் இறங்கியிருப்பவர்களையும் பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்படுவதாக கற்பனைசெய்துகொண்டு உண்மையில்லாத விடயங்களைப் பற்றி கற்பனைவாத செய்திகளை பத்திரிகைகள் ஊடாக வெளியிட்டுபரப்பும் கைங்கரியத்தில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் இது ஒரு திட்டமிட்ட சதியா என்றும் சந்தேகப்பட வேண்டியிருப்பதா

## உணவு அட்டைக்கு

# வழங்கியஉணவு பொருட்கள் பாவனைக்கு உதவாதவை

(யாழ்ப்பாணம்)

குடும்ப உணவு அட்டைகளுக்கு வழங்கப்படும் பயறு, கௌபி போன்ற உப உணவுப் பொருள்கள் பாவனைக்கு உதவாதவை. இப்படிப் பாவனையாளர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரட்ணசபாபதியிடம் முறையிட்டுள்ளார்கள்.

தரமற்ற உணவுப் பொருள்கள் ப. நோ. கூ. சங்கம் மற்றும் கடைகள் மூலம் வழங்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பகுதி சுகாதார வைத்திய அதிகாரி அல்லது சுகாதார பரிசோதகரிடம் முறையிடும்படி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாவனையாளரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் உணவுவகைகளின் தரத்தை நிர்ணயிக்கும் வகையில் தமது அதிகாரிகளை அவற்றை பரிசோதனை செய்ய அனுமதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

## மருதனார்மடம் கோட்டத்தில்

# கஷ்டப் பாடசாலைக்கு உதவிப் படி இல்லை

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கோட்டத்திற்குட்பட்ட கஷ்டமான பாடசாலைகளின் விபரங்களை அக் கோட்டக் கல்வி அலுவலகம் அனுப்பத் தவறியதால் கஷ்டமான பாடசாலைகளுக்கான படி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

தாங்கள் இதுவரை தங்கள் கோட்டத்திற்குட்பட்ட கஷ்ட மிகக்கஷ்டப் பாடசாலைகளின் வில்லை. இதிலிருந்து தங்கள் கோட்டத்தில் இவ்வாறான பாடசாலைகள் எதுவும் இல்லை என இவ்வமைச்சு கருதியுள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறேன் என்று வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் கல்விப் பணிப்பாளர் எஸ் எஸ் மனோகரன் மருதனார்மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பி

## பெருந்தோட்ட நிர்வாகம்

# தனியார் மயமாக்கலை அரசாங்கம் கைவிடாது

(கொழும்பு)

பெருந்தோட்டத் துறை நிர்வாகத்தை தனியார் மயமாக்குவது என்ற முடிவை அரசாங்கம் ஒரு போதும் மாற்றாது என்று பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தேயிலை உற்பத்தித் தொழிலில் தனியார் துறையின் பங்கு என்பது பற்றிப் பேசிய பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர் ரூபாகருணாதிலக்ககுறுகிய அரசியல் நோக்கத்துடன் சிலர் இத்திட்டத்தை எதிர்த்த போதும் இது கைவிடப்பட மாட்டாது என்று தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்

ளது என்றவினா இப்போது எழுந்திருப்பதாகத் தெரிவித்தார்.

# பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் க. பொ. த. (சா / த) பரீட்சையில் அதி சிறப்பாக சித்தியடைந்த மாணவிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நாளை 8 ஆம் திகதி காலை 8 00 மணிக்கு பரிசளித்து கௌரவிக்கின்றது.

இப்பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் அவர்கள் கலந்து பரிசில்களை வழங்குவார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் க. பரமேஸ்வரன் கலந்து கொள்வார்.

# குளங்கள் புனரமைப்பு

வரணிப் பகுதியில் உள்ள குளங்கள் 'ஊற்று' நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப் படவுள்ளன. இப்பகுதியிலுள்ள கழகங்கள் மூலம் புனரமைப்புச் செய்யப் படவுள்ள குளங்கள் பற்றிய விபரங்கள் திரட்டப் படுகின்றன.



இதே வேளை தமிழ் நாடு சட்டப்பேரவைச் செயலருக்கு உச்ச நீதிமன்றம் முன்னர் அனுப்பியிருந்த அழைப்பாணைக்குத் தொடர் நடவடிக்கையாக அவரை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டாம் என்று சட்டப்பேரவை சபாநாயகர் பிறப்பித்துள்ள உத்தரவு மாநில சட்டமன்றத்தின் அதிகாரத்துக்கு அடங்கியிருக்கிறதா என்பதை அறிய உச்ச நீதிமன்றம் இந்திய சட்டமா அதிபரை நாடியுள்ளது. இது குறித்து உச்ச நீதிமன்றம்

மான பிரசாரத்தில் இறங்கியிருப்பவர்களையும் பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்படுவதாககற்பனைசெய்துகொண்டு அதில் தன்னையும் தொடர்புபடுத்துபவர்களையும் மக்கள் தான் தண்டிக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

அண்மையில் தூத்துக்குடிக்கு சமீபமாக வாகைக்குளம் என்னுமிடத்தில் புதிய விமான நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய அவர்மேலும் கூறுகையில் எவ்வளவேனும்

## காஷ்மீரில் தேர்தல் இந்திய அரசு முயற்சி

ஜம்மு காஷ்மீரில் தேர்தல்களை நடத்துவதற்குத்தேவையான சுமுகமான இணக்க சூழ்நிலை ஒன்றை தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது என்று இந்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இதனை சவான் தெரிவித்தார்.

எல்லா ஜனநாயக சக்திகள் சமயசார்பற்ற மற்றும் தேசியவாத சக்திகளின் முனைப்பான ஒத்துழைப்புடன் அந்த மாநிலத்தில் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்திடச் செய்வதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிறைமியா பிராந்தியம் சுதந்திர பிரகடனம்

கிறைமியா பிராந்தியம் உக்ரெயினிடம் இருந்து சுதந்திரம் அடைந்து விட்டதாக கிறைமியப் பாராளுமன்றம் அறிவித்துள்ளது என மொஸ்கோ வானொலி தெரிவித்தது.

கிறைமியா மக்களின் வாக்கெடுப்பிற்குப் பின்னர் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கிறைமியாப் பாராளுமன்றம் தெரிவித்தது என்றும்வானொலி குறிப்பிட்டது.

வாக்களித்தவர்களில் பெரும்பான்மையினர் ரஷ்யர்கள் என்றும், இந்த வாக்கெடுப்பு ஓகஸ்ட மாதம் நடைபெறுவதாக இருந்தது என்றும், ஆனால் சூழ்நிலை மாற்றங்களால் இபபோது நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1954 ஆம் ஆண்டு கிறைமியா ரஷ்யாவிடம் இருந்து உக்ரெயினுக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

### நேரடிப்

சமயத்தலைவர்களை ஆலோசனைக்கழைத்து அவர்களைபிரச்சினையில் ஈடுபடவைப்பதன் மூலம் இராமஜன்மபூமி, பஞ்சாப பிரச்சினை இலங்கையின் இனப்பிரச்சினை ஆகியவைகளுக்குத் தீர்வொன்றைக் காணலாம் என்றார் அவர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கைங்கரியத்தில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் இது ஒரு திட்டமிட்ட சதியா என்றும் சந்தேகப்பட வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எனத் தெரிவிக்கப்படுகிறது

தாங்கள் இதுவரை தங்கள் கோட்டத்திற்குட்பட்ட கஷ்ட மிகக்கஷ்டப் பாடசாலைகளின் விபரக்கை அனுப்பி வைக்க

## கனடாவில் இனக்கலவரம் கடைகள் பல சேதம்

(ரொரன்ரோ)

கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையில் அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சலிஸ் நகரில் தொடங்கிய இனக்கலவரம் கனடாவின் ரொரன்ரோவிற்கும் பரவி இருப்பதாக தெரிய வருகின்றது.

தொடர்ந்து இரண்டு நாட்களாக கறுப்பு-வெள்ளையர் இனங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பொலிசார் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர் நகர வீதிகளில் கடைகளும் நொருக்கப்பட்டன. ரொரன்ரோ நகரில்வெள்ளையினத்தைச் சேர்ந்த பொலிசார் கறுப்பர் ஒருவரைச் சுட்டுக் கொன்றதற்கும் லொஸ்ஏஞ்சலிஸில் நீதிமன்றத் தீர்ப்பின்கீழ் வெள்ளை இனப் பொலிசார் விடுவிக்கப் பட்டமைக்கும் எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் ரொரன்ரோவில் ஆர்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ரொரன்ரோ நகர வீதிகளிலிருந்த கடைகளின் ஜன்னல் கண்ணாடிகள் நொருக்கப் பட்டன. ரொரன்ரோவில் சுமார் 109 தடவைகள் பெற்றோல் குண்டுகள் எறியப்பட்டதுடன் நகைக் கடை ஒன்றையும் கொள்ளையடித்தனர் கடந்த திங்களன்று நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து செவ்வாய்க் கிழமையும் கலவரங்கள் இடம் பெற்றன.

## 31 பேரை உள்ளடக்கி ஆப்கானில் அமைச்சரவை

ஆப்கானிஸ்தானில் முப்பத்தியொரு பேரைக் கொண்ட ஒரு அமைச்சரவை நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது

மக்கள் ஆதரவு ஜமாயுதீன் தளபதி அகமத் ஷாமசூத் புதிய பாதுகாப்பு அமைச்சராகவும், சுலைமான் தனானிபதில் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், சுலைமான் ஜா. ஜா நவ்ரொக் உள் துறை அமைச்சராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஐம்பத்தியொருபேர் இடைக்கால சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஆறு உறுப்பினர் முஜாகிதீன் குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆலோசனைக்குப் பின்னர் இந்தப் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் பெயர் இது வரை அறிவிக்கப்படவில்லை.

இதே நேரம் காபூலுக்கு உள்ளேயும், புறநகர்ப் பகுதிகளிலும் ஆப்கான் அரசுப் படைகளுக்கும் குல்புதீன் ஹெக்மத்தியார் தலைமையிலான படைகளுக்குமிடையே கடும் மோதல்கள் இடம் பெற்று வருவதாகவும் தெரியவருகிறது

### திறமை

பல்கலைக் கழகத் தெரிவு தொடர்பாக பெற்றோர்கள், அதிபர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே ஆணைக்குழு மேற்படிமுடிவை மேற்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முப்பது சத விகித தெரிவு மாவட்ட அடிப்படையில் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பணிப்பாளர் எஸ் எஸ் மனோகரன் மருதனார்மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுள்ளார்.

## ஒரு மாதத்தில் 738 வீதி விபத்துக்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் சென்ற மாதம் 738 வீதி விபத்துகள் ஏற்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் 677 விபத்துக்களே இடம்பெற்றது என்றும் இந்த ஆண்டு நாளொன்றுக்கு 24 விபத்துக்கள் வீதம் அதிகரித்துள்ளது என்றும்,

பதினொரு மரணங்கள் சம்பவித்தது என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

### ஐந்து நாள்

ணிச் செயலாளர் திரு யோகி, யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன், நிதிப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி, யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இதன்போது விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு தேவர் நன்றியுரை வழங்கினார்.

நேற்று மாலை ஏழு மணிக்கு ஆரம்பமான தமிழிசை விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நள்ளிரவு வரை நடைபெற்றது. (ச)

### ராஜீவ்

ராஜீவ்காந்தியின்முதலாவது நினைவுதினத்தை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள என காங்கிரஸ் கட்சியினால் நியமிக்கப்பட்ட குழு ஆராய்ந்த நாற்பதுக்கும் அதிகமான யோசனைத் திட்டங்களில் விடுதலைப் புலிகள் மீதான இந்தத் தடை யோசனையும் ஒன்றாகும் என்றும் கூறப்படுகிறது.

தார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா பேசுகையில் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சோசலிசப் புரட்சிகள் எந்தளவிற்கு பயனளித்துள்

### அகதிகளுக்கு

களைப் பார்வையிட்டார்.

அகதிகள் பலர் தமது கோரிக்கைகளை அவரிடம் தெரிவித்தார்.

தம்மை தமது சொந்த இடங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும், தாண்டிக்குளத்திற்கு அப்பால் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலுள்ள தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்குரிய அனுமதியை வழங்கும்படி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்குமாறு நாடு திரும்பிய அகதிகள் பலரும் அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதே வேளை தாண்டிக்குளம், வேப்பங்குளம் ஆகிய அகதி முகாம்களில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும், வழங்கப்படும் சமைத்த உணவு தரமற்றது எனவும் அகதிகள் அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

### ஏறாவூர்

களினால் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வாழும் தமிழ் மக்கள் நிவாரணம் வழங்கப்படுவதிலும் புறக்கணிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். 1990-ம் ஆண்டில் சிறிலங்கா அரசு போர் தொடங்கிய பின்னர் அங்குள்ள தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், முஸ்லிம்களாலும் பெரும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததுவே.

கடந்த ஆண்டில் மட்டும் இப்பகுதியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருபதிரண்டுக்கும் அதிகமான தடவை வழங்கப்பட்ட நிவாரணம் தமிழ் மக்களுக்கு பன்னிரண்டு தடவை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.


**UNIVERSITY OF JAFFNA - SRILANKA**

**EXTERNAL EXAMINATION**

**First in Arts / First in Commerce**

*Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination scheduled to commence in october 1992.*

*Examination Entry forms could be obtained from the External Examination and Registration Unit, University of Jaffna in person or by post from 11-05-1992.*

*Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for the payment of Rs 15/-. Those who wish to obtain the forms by post are required to send a money order / Postal order for Rs 15/- drawn in favour of Bursar. University of Jaffna together with a self addressed envelope affixing stamp to the value of Rs. 8/-*

*Completed Examination Entry forms should be submitted to the External Examination& Registration Unit on or before 20-06-1992.*

Registrar .
University of Jaffna
(R/4376)